# தமிழ்நாடு அரசு

## நெடுஞ்சாலைத்துறை

திருநெல்வேலி வட்டம், திருநெல்வேலி–2

**சிட் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ஒப்பந்த அறிவிப்பு எண் 19/2005–06/வ1 நாள் 8–7–2005

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பாகவும் சிறப்பு தலைமைப்பொறியாளர் (நெ) திருநெல்வேலி அவர்களால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளிகள், ரிசர்வ் லைன் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி–2ல் உள்ள அவரது அலுவலகத்தில் 29-7-2005 அன்று பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) வரவேற்கப்படுகிறது. இவ்விதம் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே 3.15 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் முன்னிலையில் வட்ட அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீட்டு தொகை ரூபாய் லட்சத்தில் | முன் வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி படிவம் விலை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்குமிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | **<u>முதல் அழைப்பு</u>**<br>**<u>இயற்கை இடர்பாடுகள் சுனாமி 2004 பாதிக்கப்பட்ட சாலைகளுக்கு மராமத்து செய்தல்</u>**<br>**<u>மாவட்ட முக்கிய சாலைகள் (முதல் கட்டம்)</u>**<br>**<u>நாகர்கோவில் (நெ) கோட்டம்</u>**<br>நாகர்கோவில் (நெ) உட்கோட்டத்திலுள்ள கோட்டார்–மணக்குடி சாலை கிமீ 4/0–8/0 முடிய மேம்பாடு செய்தல் | 62.00 | 41,000 | 5000+ 630 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை பொ.ப.து வளாகம் நாகர்கோவில் |
| 2 | **<u>மாவட்ட இதர சாலைகள் (நான்காம் க்ட்டம்)</u>**<br>குழித்துறை (நெ) உட்கோட்டத்திலுள்ள குறும்பனை சாலை கிமீ 0/0–5/6 முடிய மேம்பாடு செய்தல் | 95.50 | 57,800 | 5000+ 630 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை பொ.ப.து வளாகம் நாகர்கோவில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | **<u>இரண்டாம் அழைப்பு</u>**<br><br>**<u>விரிவான சாலை உள்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டம்</u>**<br>**<u>மாவட்ட முக்கிய சாலைகள் (இரண்டாம் கட்டம்)</u>**<br><br>**<u>நாகர்கோவில் (நெ) கோட்டம்</u>**<br>தக்கலை (நெ) உட்கோட்டத்திலுள்ள தக்கலை–தடிக்காரன்கோணம் சாலை கிமீ 0/0–6/0 மற்றும் கிமீ 7/0–8/6 முடிய மேம்பாடு செய்தல் மற்றும் அகலப்படுத்துதல் உட்பட | 94.00 | 57,000 | 5000+<br>630 | கோட்டப்பொறியாளர்<br>நெடுஞ்சாலை<br>பொ.ப.து வளாகம்<br>நாகர்கோவில் |

முன்வைப்புத்தொகைக்காக ஷெடியூல்டு வங்கியிலிருந்து வழங்கப்பட்ட வைப்புத்தொகை ரசீது கேட்பு வரைவோலை மற்றும் அஞ்சலக சிறு சேமிப்பு பத்திரங்கள் முதலியன கோட்டப்பொறியாளர் (நெ) நாகர்கோவில் பெயரில் ஈடு செய்யப்பட்டிருக்கவேண்டும். மேலும் முதிர்வுபெறாத இந்திரவிகாஸ் பத்திரங்கள் முன்வைப்புத்தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். மேற்கண்ட வேலைகளுக்கு ஷெடியூல்டு வங்கியிலிருந்து பெறப்பட்ட ரத்து செய்ய முடியாத வங்கி உத்திரவாதம் முன்வைப்புத்தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். கோட்டப்பொறியாளர் (நெ) நாகர்கோவில் பதவி பெயரில் ஈடு செய்யப்படாத முன் வைப்புத்தொகைகள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன் ஒப்பந்தப்புள்ளியும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் தபால் மூலமாகவோ, கூரியர் மூலமாகவோ, தனி நபர் மூலமாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ சிறப்பு தலைமைப்பொறியாளர் (நெ) திருநெல்வேலி அவர்களின் அலுவலகத்திற்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெறப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாளான 29–7–2005 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும். அவ்வாறு உரிய நேரத்தில் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். கூரியர், அஞ்சல் அல்லது தனி நபர் ஆகியோர் மூலம் ஏற்படும் காலதாமதத்திற்கு இத்துறை எவ்வகையிலும் பொறுப்பு ஏற்காது.

மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கோட்டப்பொறியாளர் (நெ) நாகர்கோவில் அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் கோட்டப்பொறியாளர் (நெ) நாகர்கோவில் பதவி பெயரில் அவர்களது எல்லைக்குட்பட்ட அரசு கருவூலத்தில் கட்டணம் செலுத்தி (திருப்பித்தரப்படமாட்டாது) செலுத்துச் சீட்டுடன் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் 26–7–2005 வரை எழுத்து மூலம் நேரடியாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அவரது முகவர் மூலமாகவோ விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி படிவ விலை மற்றும் விற்பனை வரிக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை ஷெடியூல்டு வங்கியிலிருந்து கோட்டப்பொறியாளர் (நெ) நாகர்கோவில் பதவி பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை வடிவத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை<br>ரூ. 5,000/- வ. எண் 1, 2 மற்றும் 3 | தொகை செலுத்தவேண்டிய கணக்குத் தலைப்பு<br><br>8658 Highways suspense account III Other receipt to the credit of the Divisional Engineer (H) Nagercoil |
| விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ்<br>ரூ. 630/- வ. எண் 1, 3 மற்றும் 3 | 0040 Sales Tax |

ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவு அஞ்சலிலோ, கூரியர் மூலமாகவோ பெற விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் தமது விருப்பத்தினை எழுத்து மூலம் தெரிவிப்பதோடு ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்குரிய கட்டணத்தை மேற்கூறிய முறையில் செலுத்தி அதற்கான ரசீது மற்றும் அதற்குரிய அஞ்சல் கட்டணம் ஆகியவை அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மேற்கூறிய முறையில் ஒப்பந்தக்காரர்களின் சொந்த பொறுப்பில் அனுப்பிவைக்கப்படும். இதனால் ஏற்படும் காலதாமதத்திற்கு கோட்டப்பொறியாளர் (நெ) நாகர்கோவில் எந்த விதத்திலும் பொறுப்பல்ல.

குறிப்பு

1) இத்துறையில் முதல் வகுப்பு மாநில அளவில் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும்.
2) சிறப்பு தலைமைப்பொறியாளர் (நெ) திருநெல்வேலியோ அல்லது தக்க அலுவலரோ எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது அனைத்தையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க முழு அதிகாரம் உண்டு.
3) மைய சுடுகலவை இயந்திரம் மற்றும் பேவர் பினிசர் சொந்தமாக வைத்திருந்து அதற்கான ஆவணங்கள் அளித்தால் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வழங்கப்படும்.

சிறப்பு தலைமைப்பொறியாளர் (நெ),
திருநெல்வேலி–2.

சிறப்பு தலைமைப்பொறியாளருக்காக (நெ),
திருநெல்வேலி–2.